CEMCA

# செவிச்செல்வம்

## "Diploma in Community Radio & Mass Communication"

# Radio Enabled Learning

August -2019

STUDY MATERIAL

## CHAPTER 7 - COMMUNITY RADIOS OF DIFFERENT REGIONS IN INDIA

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# *SUCCESSFUL RADIO STATIONS – EXAMPLE FROM CENTRAL INDIA*

## மத்திய இந்தியாவில் வெற்றிகரமாக இயங்கும் சமுதாய வானொலிகள்-ஒரு கண்ணோட்டம்

CHAPTER - 7

EPISODE -31

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# இந்தியாவில் உள்ள பல்வேறு பகுதிகளில் இயங்கும் சமுதாய வானொலிகள்:

- மத்திய இந்தியாவில் இயங்கும் *Chanderi ki Awaaz* சமுதாய வானொலி நிலையம்.
- வட இந்தியாவில் இயங்கும் *Alfaz-E-Mewat* சமுதாய வானொலி நிலையம்.
- தென் இந்தியாவில் இயங்கும் கோத்தகிரி சமுதாய வானொலி நிலையம்.

# மத்திய இந்தியாவில் இயங்கும் *Chanderi ki Awaaz* சமுதாய வானொலி நிலையம்.

- இந்த சமுதாய வானொலியின் அலைவரிசை எண் 90.4 MHz.
- இந்த சமுதாய வானொலி நிலையம் 2010 ஆம் ஆண்டு, மார்ச் 27ஆம் தேதி துவங்கப்பட்டது.
- தினமும் ஒலிபரப்பு செய்யக்கூடிய நேரம் 8 மணி நேரம், காலை 8 மணி முதல் 12 மணி வரை, மாலை 4 மணி முதல் 8 மணி வரை ஒலிபரப்பப்படுகிறது.
- ஒலிபரப்பு செய்யக்கூடிய பகுதிகள் வானொலி நிலையத்தை சுற்றியுள்ள 15 முதல் 20 கிலோ மீட்டர் வரை ஒலிபரப்பப்படுகிறது.

# *Chanderi ki Awaaz* சமுதாய வானொலி நிலையத்தின் முக்கிய நிகழ்ச்சிகள் :

- உடல் நலம் மற்றும் ஊட்டச்சத்து, பெண்களின் உரிமைகள், வேலைவாய்ப்பு மற்றும் சட்டம் சார்ந்த விழிப்புணர்வு.

- இந்த முதாய வானொலி நிலையம் தொடங்குவதற்கு (*World South Asia*) உலக தெற்கு ஆசிய என்ற அமைப்பு மற்றும் *UNESCO* வும் உறுதுணையாக இருந்தது.

- சமுதாய வானொலி நிலையத்தில் கட்டிடம் கட்டுவதற்கு ஆலோசனை கூறியும் உலக தெற்கு ஆசிய அமைப்பு *Chanderi ki Awaaz* சமுதாய வானொலி நிலையம் அமைக்க பெரும் உதவியாக இருந்தது.

- சமுதாய வானொலி நிலையம் மார்ச் 27, 2010 ஆம் ஆண்டு மத்திய பிரதேசத்தில் உள்ள *Chenderi* என்னும் இடத்தில் தொடங்கப்பட்டது.

# *Chanderi ki Awaaz* சமுதாய வானொலி நிலையம் :

- *Bunker Vikas Sansthan* என்ற அமைப்பு உள்ளூர் நெசவாளர்களின் சமூகத்தை சேர்ந்த அமைப்பாகும்.
- *Chanderi ki Awaaz* சமுதாய வானொலி நெசவாளர் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டது.
- இந்த சமுதாய வானொலி நிலையத்தில் நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கணினி மற்றும் பல்துறை ஊடகம் பற்றிய பயிற்சி அளிக்கிறது.
- இப்பயிற்சி பெற்ற மாணவர்கள் பல்வேறு துறைகளில் சாதிக்க பெரிதும் உதவியாக உள்ளது.

# *Chanderi ki Awaaz* சமுதாய வானொலி நிலையம் :

- சமுதாய வானொலி நிலையம் தொடங்குவதற்கு முன்பு இருந்தே இந்த வானொலி அமைப்பு பல்வேறு நிலையங்களுக்கு நிகழ்ச்சிகளை இணைய வாயிலாகவும் தயாரித்து கொடுத்து கொண்டிருந்தது.
- சமுதாய வானொலியில் ஒலிபரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் நெசவு தொழில் பற்றிய தகவல்களை நிகழ்ச்சிகளாக தொகுத்து வழங்குகி கின்றார்கள்.
- நெசவாளர்களின் திறமையை வெளிப்படுத்தும் கருவியாக இந்த சமுதாய வானொலி நிலையம் செயல்படுகின்றது
- *My Inspiration My Skills* என்ற அடிப்படையில் அங்குள்ள கிராமப்புற கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வந்து ஊக்கப்படுத்தப்படுகிறது.

# *Chanderi ki Awaaz சமுதாய வானொலி நிலையம் :*

- *சமுதாய வானொலி நிலையத்தை நெசவாளர்கள் சமூகத்தினரே தானாக முன்வந்து நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்கள்.*
- *நெசவாளர்களின் திறமையை வெளிப்படுத்தும் கருவியாக இந்த சமுதாய வானொலி செயல்படுகிறது.*
- *Meri prerna mera Hunar (my inspiration my skills) என்ற அடிப்படையில் கிராமப்புற கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வந்து ஊக்கப்படுத்தப்படுகிறது.*
- *நெசவாளர்கள் தங்களது நெசவுத் தொழிலின் நுணுக்கங்களை அவர்களது படைப்பில் வெளிக்காட்டுகின்றனர்.*

# *Chanderi ki Awaaz* சமுதாய வானொலி நிலையம் :

- நெசவாளர்கள் நெசவுத் தொழிலை கூட்டாக சேர்ந்து பல்வேறு மாதிரிகளில்  புடவை உற்பத்தி செய்து விற்பனை செய்துவருகின்றனர்.
- உற்பத்தி செய்த சேலைகளை *Chanderi* சாரீஸ் என்ற பெயரில் வியாபாரம் செய்துவருகின்றனர்.
- இவர்கள் அனைவரும் கல்வியறிவு இல்லாதவர்கள்.
- *chadneri* என்ற சமுதாய வானொலி மூலம் விளம்பரப்படுத்தி விற்பனை செய்கின்றனர் மின்னஞ்சல் மற்றும் இணையம் வாயிலாக விற்பனை செய்து வருகின்றனர்.
- *Chanderi ki Awaaz* சமுதாய வானொலி மூலமாக உள்நாட்டில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் இந்த நெசவாளர்கள் சந்தையில் விற்பனை செய்துவருகின்றனர்.

# *Chanderi ki Awaaz* சமுதாய வானொலி நிலையம் :

- நெசவாளர்களின் வியாபாரம் எழுச்சி பெறவும் இந்த சமுதாய வானொலி மிகவும் உறுதுணையாக உள்ளது.
- *Chanderi ki Awaaz* சமுதாய வானொலி தொடங்கப்பட்டதில் இருந்தே நெசவாளர் சமூகத்தினருக்கு நேரடியாகவும் தொழில் ரீதியாகவும் நல்ல லாபத்தைப் பெற்றுத் தந்துள்ளது.
- மேலும் அவர்களது ஈடுபாடும் மற்றும் பங்களிப்பும் மேன்மேலும் உயர இந்த சமுதாய வானொலி உதவி புரிகிறது.
- சமுதாய வானொலியில் ஒலிபரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகள் அவர்களின் மனதில் தன்னம்பிக்கை வளர்ப்பதற்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

# *Chanderi ki Awaaz* சமுதாய வானொலி நிலையம் :

- இப்பகுதியிலுள்ள ஊனமுற்றோர், கல்வியறிவு இல்லாதவர்கள் தயாரித்த பொருட்களை உலகம் முழுவதும் இணைய வழி மூலமாக வணிகம் செய்வதற்கு இந்த சமுதாய வானொலி மிகவும் உதவியாக உள்ளது.

- இளைஞர்கள் சமுதாய வானொலி கேட்பதன் மூலமாக கல்வியறிவு பெறுவது மட்டுமல்லாமல் அனுபவ அறிவும், தொழில் சார்ந்த அறிவு பெறுகிறார்கள்.

- *Chanderi ki Awaaz* சமுதாய வானொலி நெசவாளர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறது.